**IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM**

| | | |
|---|---|---|
| **MCOP No. 270/2022** | **நாள் – 25.09.2025** | **சாட்சி – ம.சா.1** |

**திருமதி. கனகவள்ளி, கணவர் பெயர் சேப்பையன்**

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் வீட்டுக் குடித்தனம் என்றால் சரிதான். விபத்து எங்கு நடந்தது என்றால் கிருஷ்ணாபுரத்தில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி செல்லும்போது விபத்து நடந்தது. நான் விபத்து சமயத்தில் எவ்வாறு சென்றேன் என்றால் நான் மட்டும் நடந்து சென்றேன். நான் எங்கு சிகிச்சை பெற்றேன் என்றால் முதலில் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று பின் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். பின் பட்டுக்கோட்டை தனியார் மருத்துமனையில் சிகிச்சை பெற்றேன். பட்டுக்கோட்டை தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் அதுபற்றி தெரியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள மோட்டார் வாகன ஆய்வறிக்கை ம.சா.ஆ–4ல் ஓட்டுநர் உரிமம் புதுப்பிக்கப்படவில்லை என்று 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் பாலமுருகன் ரூ.5000/– அபராதம் செலுத்தியுள்ளார் என்றால் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. நான் வீட்டுக் குடித்தனம் என்றாலும், எவ்வித வேலைக்கும் செல்லவில்லை என்றாலும், அதிக இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காக வேலை செய்து வருவதாக உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சிகிச்சை பெற்று தற்பொழுது பூரண குணம் அடைந்துவிட்டேன் என்றால் சரியல்ல. இயற்கையாக வயோதிகத்தின் காரணமாகத்தான் எனக்கு உபாதை உள்ளது என்றாலும், எனக்குள்ள உபாதைக்கும், விபத்துக்கும் சம்பந்தம் இல்லை என்றால்

சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு மிக அதிகம் என்றாலும், விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் ஓட்டியதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் வயோதிகத்தின் காரணமாக நடக்க முடியாமல் கீழே விழுந்துவிட்டேன் என்றாலும், விபத்து எதுவும் ஏற்படவில்லை என்றாலும், 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றாலும் சரியல்ல.

*Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.*

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2025.09.25 18:43:42 +0530

*Additional Chief Judicial Magistrate,*
*Kumbakonam.*